1) அனைத்து உறுப்பினர்களும் சங்க கூட்டத்திற்கு தவறாமல் கலந்துகொள்ள வேண்டும். தவறுபவர்கள் சங்க செயலாளர் அல்லது தகுந்த அலுவலர்களிடம், தகுந்த காரணங்களுடன் முன்கூட்டியே தெரிவிக்கவேண்டும்.

2) சங்க கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு எடுக்கப்படும் அனைத்து விதமான முடிவுகள் மற்றும் திட்டங்களுக்கு அனைத்து உறுப்பினர்களும் ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்.

3) ஆண்டு சந்தா தொகையினை குறிப்பிட்ட கால கெடுவுக்குள் செலுத்த வேண்டும்.

4) சங்கத்தின் தொலைத்தொடர்பு குழுக்களான WHATSAPP, TELEGRAM & MAIL போன்றவற்றில் தங்களது பதிவுகளை தெரிவிக்கும்போது ஜாதி, மதம், அரசியல், நிறம், தீவிரவாதம் மற்றும் அரசுகளை எதிர்த்து கருத்துக்கள் பகிரப்படக்கூடாது. மீறினால் சங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

5) தேசிய எதிர்ப்பு, சட்ட எதிர்ப்பு மற்றும் சமூக எதிர்ப்பு போன்ற கருத்துகளை சங்க குழுக்களில் தெரிவிக்கக்கூடாது. மீறினால் சங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

6) சங்கத்தின் குறிக்கோள்களை எதிர்த்து மேற்கண்ட குழுக்களில் தெரிவித்து, வீண் விவாதங்களில் ஈடுபடமாட்டேன்.

7) சங்க துணை விதிகளை கட்டாயம் பின்பற்றவேண்டும்.

8) சங்கத்தின் குறிக்கோள்களை எப்போதும் மதிப்பேன்.

9) சங்கத்தின் குறிக்கோள்களை எப்போதும் மீறி எனது நடவடிக்கைகள் இருக்காது என உறுதியளிக்கின்றேன்.

10) சங்கத்தின் அனைத்து விதமான திட்டங்களிலும் பங்குபெறுவேன்.

11) சங்கத்தின் உறுப்பினர் என்பது வரையறுக்கப்பட்டது என்பதை அறிவேன்.

12) சங்கத்தின் உறுப்பினராக, துணை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தையும் மனதார ஏற்றுக்கொள்கிறேன்.

13) சங்கத்தின் உறுப்பினரை நீக்குதல் தொடர்பான துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள அம்சங்கள் அனைத்தையும் மனதார ஏற்றுக்கொள்கிறேன்.

14) சங்கத்தின் தீர்மானங்கள் அனைத்தையும் பின்பற்றுவேன்.

15) சங்கத்தின் உறுதிமொழியில் உள்ள அனைத்து அம்சங்களையும் பின்பற்றுவேன் என உறுதியளிக்கிறேன்.

16) சங்கத்தின் அனைத்து விதமான சட்ட திட்டங்களுக்கும் கட்டுப்படுவேன் என மனதார உறுதியளிக்கிறேன்.

17) நான் உறுப்பினராக சேர்வதற்கு கொடுத்துள்ள தகவல்களும், சான்றுகளும் உண்மை என உறுதி அளிக்கிறேன். பிற்காலத்தில் உண்மை இல்லை என தெரிய வரும்போது எனது உறுப்பினர் என்கிற உரிமையையும், தகுதியையும் இழக்கிறேன் என்பதை மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிறேன்.

மேற்கண்ட அனைத்து ஷரத்துகளுக்கும் மனதார ஒப்புதல் அளித்து உறுதியளிக்கிறேன். மீறினால் சங்கம் எடுக்கும் நடவடிக்கைக்கு உட்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

நாள் :
இடம் :

கையொப்பம்.